மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், கோவில்பட்டி

அ.வ.எண். 110 /2019

வாதி தரப்பு சாட்சி வாக்குமூலம் வா.சா.1.

---

பெயர். - திரு.ஆறுமுகச்சாமி
த/பெ. - திரு.காசிநாடார்
கிராமம் - கரிசல்குளம்
தொழில் - விவசயாம்
தாலுகா - கோவில்பட்டி
வயது - 57.

1872-ஆம் ஆண்டு இந்திய சாட்சிய சட்டத்தின்படி 2025-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 08-ஆம் நாள் இந்நீதிமன்ற உதவியாளரால் சத்தியப்பிரமாண வாக்குமூலம் செய்யப்பட்டு, நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்யப்பட்டு, ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

முதல் விசாரணை.-

1) நான் இந்த வழக்கில் 3ம்வாதி ஆவேன். எனது தரப்பு சாட்சியத்தை நிருபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். அதை வாதிகள் தரப்பில் ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன்.

| | |
|---|---|
| 1 | 11.05.1967 ல் மாரியம்மாள் பெயதிலான கிரைய ஆவணத்தின் சார்பவதிவக நகல் வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 2 | மாரியம்மாள் பெயரிலான பட்டா எண்.790 வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 3 | மாரியம்மாள் பெயரிலான தீர்வை ரசீதுகள் 3 எண்ணம் வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 4 | 11.12.2017 ல் 1 முதல் 3 வாதிகள் பெயரில் மாரியம்மாள் எழுதிக்கொடுத்த தானசெட்டில்மெண்ட் சார்பதிவக நகல் வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 5 | 21.08.1958 அன்று மகாதேவ ஐயர் இலடசுமியம்மாளுக்கு எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரத்தின் சார்பதிவக நகல் வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 6 | வாதிகள் பெயரில் உள்ள கணினி பட்டா எண்.649 கணினி பதிவிறக்க நகல் வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 7 | வாதிகள் பெயரிலான தீர்வை ரசீதுகள் எண்ணம் 1 வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது. |

பிராதுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

குறுக்கு விசாரணை - வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க வேறுதேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒப்பம்)C.கருப்பசாமி,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
கோவில்பட்டி,
08.10.2025.